*3 : 3* உயர்நடைப், உயர்நிலைப். *(68)*

## 1840. படலம் என்னும் பெயர்

ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின், அது **படலம்** ஆகும்.

**படலம் என்னும் பெயர் :**

ஒரு முறையாலன்றிக் கலந்த வேறு பொருள்களும் ஒரு பொதுப் பெயரின் கீழ் வருவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* படலமென்னும் சொற்பொருட் பெயர். *(69)*

## 1841. வேற்றிசைப்பா என்னும் பெயர்

சருக்க முடிவினும் இலம்பக முடிவினும்
விருத்த நடையது **வேற்றிசைப் பாவே.**

**வேற்றிசைப்பா என்னும் பெயர் :**

சருக்கமுடிவினும் இலம்பக முடிவினும் வேறுபட்ட சந்த நடையில் அமைவது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* வேறிசைப்பாவின் பெயர், வேற்றிசைப்பா என்னும் சொற்பொருட் பெயர், வேற்றிசைப் பென்னும் சொற்பொருட் பெயர்.

*3—4* வேறிசைப்பாவே, வேறிசைப் பாகும். *(70)*

## 1842. உரைப்பொருளின் பெயர்

விரித்துரை (மெய்) **உரைப் பொருளது** ஆகும்.

**உரைப் பொருளின் பெயர் :** *(1)*

விரித்துரை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* விரித்துரையின் பெயர்



*3—4* பொருள வாகும்
விரித்துரை மெய்யுரை உரைப்பொரு ளாகும்
—அச்சுப்பிரதி. *(71)*

## 1843. பொழிப்பு என்னும் பெயர்

**பொழிப்பு** எனப்படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டு உரைப் பதுவே.

**பொழிப்பு என்னும் பெயர்:** *(1)*

பாடலுள் பொருளைத் திரட்டித் தொகுத்து உரைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* பொழிப்புரைப் பெயர், பொழிப்புரையின் பெயர். *(72)*

## 1844. பதிகம் என்னும் பெயர்

**பதிகக் கிளவி** பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் ஆகும்.

**பதிகம் என்னும் பெயர்:** *(1)*

நூலுள் அமைந்த பலவகையான பொருள்களையும் தொகுத்து உரைப்பது.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* பதிகம் என்னும் சொற்பொருட் பெயர்.

*2 : 3—4* சொல்லுவ தாகும், சொல்லுதறானே, சொல்லுவர் புலவர். *(73)*

## 1845. இலக்கியத்தின் பெயர்

**இலக்கியம்**, உதாரணம், எடுத்துக் காட்டல்.
ஞாபகமும் பிசியும் அப்பொருள் நடைய.

**இலக்கியத்தின் பெயர் :** *(4)*

1. உதாரணம், 2. எடுத்துக்காட்டல், 3. ஞாபகம், 4. பிசி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இலக்கியம் என்னும் பெயர், உதாரணத்தின் பெயர்.

அச்சுப்பிரதியில் நூற்பா அமைப்பு பின்வருமாறு :

இலக்கியத்தின் பெயர்

இலக்கிய முதாரண மெடுத்துக் காட்டல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த நூற்பா :

மற்றுமிலக்கியத்தின் பெயர்

275. ✗ இதிகா சமுமே யிலக்கிய மாகும்.

இந்நூற்பாவைப் பிற்பதிப்புக்களில் இலக்கியத்தின் பெயர் கூறும் முந்திய நூற்பாவுடன் ஒரு சேர இணைத்து அமைத்துள்ளனர்.

இதன் பின்னர்,

அரும்பொருளின் பெயர்

ஞாபகமும் பிசியு மரும்பொரு ளடைய. (74)

## 1846. பாவின் பெயர்

தூக்கும், யாப்பும், செய்யுளும், கவியும்,
பாட்டும், கவிதையும் பாஎனப் படுமே.

பாவின் பெயர் : (6)

1. தூக்கு, 2. யாப்பு, 3. செய்யுள், 4. கவி, 5. பாட்டு, 6. கவிதை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 தூக்குங் கவியுஞ் செய்யுளுந் தொடர்பும்
தூக்குந் தொடர்புஞ் செய்யுளுங் கவியும். (75)

## 1847. வெண்பாவின் பெயர்

முதற்பா, வெண்பா.



வெண்பாவின் பெயர் : (1)

முதற்பா.

பாடவேறுபாடு—விளக்கம்

1. முதுப்பா. (76)

## 1848. கலிப்பாவின் பெயர்

முரற்கை, கலிப்பா.

கலிப்பாவின் பெயர் : (1)

முரற்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

1 முரட்கை, முரக்கை

வெண்பாவுக்கும் கலிப்பாவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1847, 1848 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (77)

## 1849. ஆசிரியப்பாவின் பெயர்

அகவலும், தொகையும் ஆசிரியப் பாவே.

ஆசிரியப்பாவின் பெயர் : (2)

1. அகவல், 2. தொகை. (78)

## 1850. வண்ணத்தின் பெயர்

அராகம், முடுகியல், வண்ணம் ஆகும்.

வண்ணத்தின் பெயர் : (2)

1. அராகம், 2. முடுகியல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வண்ணகத்தின் பெயர் —அச்சுப்பிரதி

3—4 வண்ணக மாகும் —அச்சுப்பிரதி. (79)

# திவாகரம்

## இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை
இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்
1993

திவாகரம் (இரண்டாம் தொகுதி)
A Critical Edition of Tivakara Nikantu (Volume II)

முதல் பதிப்பு 1993

விலை: ரூ. 110-00

நூல்கள் கிடைக்குமிடம்

இயக்குநர்
பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.

அச்சிட்டோர்:
ஜனசக்தி அச்சகம்
சென்னை.

# திவாகரம்
## இரண்டாம் தொகுதி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 9. | செயல் பற்றிய பெயர்த் தொகுதி | 519–596 |
| 10. | ஒலி பற்றிய பெயர்த் தொகுதி | 597–758 |
| 11. | ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி | 759–844 |
| 12. | பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி | 845–950 |
| | சொற்பொருள் அகராதி | 951–1192 |
| | தலைப்புப் பெயர் அகராதி | 1193–1229 |